சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08.

ந.க.எண். 274/ஆ6/2020 நாள். 29.01.2022.

பொருள் பள்ளிக்கல்வி – அரசின் நிலையான வழிகாட்டு நெறிடுமுறைகளைப் பின்பற்றி 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அனைத்து மாணவர்களுக்கும் 01.02.2022 முதல் நேரடி வகுப்புகள் – வழிகாட்டு நெறிறைகள் வழங்குதல் – சார்ந்து.

பார்வை 1 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை (D.M.IV) கடித எண்.28024/D.M.IV(2)/2021-1, dated.26.08.2021.

2 அரசு செய்தி வெளியீடு எண்.187, நாள்.27.01.2022.

3 சென்னை-06, பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகளின், ந.க.எண்.001446/பிடி1/இ1/2022, நாள்.28.01.2022.

…………

பார்வை (3)-இல் காணும் பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகளின்படி கொரோனா பெருந்தொற்று காரணமாக 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு நேரடி வகுப்புகள் 31.01.2022 வரை இரத்து செய்யப்பட்டு இருந்தது.

இந்நிலையில் பார்வை (2)-இல் காணும் அரசு செய்தி வெளியீட்டின்படி, மாணவர்களின் கல்வி நலனை கருத்தில் கொண்டு பார்வை (1)-இல் காண் நிலையான வழிகாட்டு நெறிமுறைகளைப் (SOP) பின்பற்றி அனைத்து வகையான பள்ளிகளும் 01.02.2022 முதல் செயல்பட அனைத்து விதமான ஆயத்தப் பணிகளையும் உடன் மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் 01.02.2022 முதல் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை நேரடி வகுப்புகள் நடைபெறுவதை அனைத்து மாணவர்களுக்கும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் வாயிலாக தெரிவிக்க தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இரா.சி. பரியா 29/1/22

முதன்மைக்கல்வி அலுவலர் (கூ.பொ)

சென்னை

29.1.2022

பெறுநர்

1. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
2. அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
3. அனைத்து வகைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / முதல்வர்கள் , சென்னை மாவட்டம்.

(மாவட்டக்கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டாரக்கல்வி அலுவலர்கள் வாயிலாக)

நகல்

கல்வி அலுவலர், சென்னை மாநகராட்சி, சென்னை-03.